**நாத்தாண்டிய பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாத்தாண்டிய பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,475,307 தொகையான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீரஹேன மயானம், நாத்தாண்டியா நகர சபைக் கட்டிடம், 02 நீர்ச் செயற்திட்டங்கள், நாத்தாண்டியா விற்பனைத் தொகுதி, மாரவில நவீன சந்தைத் தொகுதி, தெமடபிட்டிய சந்தைத் தொகுதி மற்றும் ஹால் பன்வில கடைகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009, 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்த ரூபா 223,091 தொகையான பெறுமதியில் நூலகப் புத்தகங்களின் பற்றாக்குறை நிலையான சொத்துக்களிலிருந்தும் மூலதனச் செலவினத்திற்கான வருமானத்திலிருந்தும் பங்களிப்புக் கணக்கிலிருந்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட ரூபா 12,412,706 தொகையான காசு மீதியில் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட கால எல்லைக்குள் மதிப்பிழந்த 11 காசோலைகளின் பெறுமதியான ரூபா 748,240 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிலுவையான வீதவரி, நீர் வரி மற்றும் ஏக்கருக்கான வரி போன்ற வருமான விடயங்களில் பேரேட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,193,746 தொகையாகவும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,164,830 தொகையாகவும் இருந்ததுடன் அம் மீதிகளுக்கிடையே ரூபா 1,028,916 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடு கண்டறியப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 254,338,973 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்படும் விபரங்களின் படி, பெறுமதி ரூபா 757,267 தொகையான மதிப்பிழந்த 12 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 189 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 61,597,179 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,557,906 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (அ) | வீதவரியும் வரியும் | 17,814 | 15,295 | 22,902 |
| (ஆ) | வாடகை | 20,947 | 21,893 | 2,224 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,008 | 1,018 | 87 |
| (ஈ) | ஏனைய வருமானம் | -- | 57,316 | 139,975 |

**2.2.2 வீதவரி**

மீளாய்வாண்டிற்காகப் பட்டியலிடப்பட்ட வீத வரித் தொகையான ரூபா 15,929,547 இல் ஆண்டின் போது 54% மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (அ) | நீதிமன்றத் தண்டப் பணம் | 2,930,854 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 74,970,732 |

**2.2.4 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைகட்டணங்கள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 1,805,437 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு தாமதிக்கப்பட்டதன் காரணமாக சபைக்கு விதிக்கப்பட்டிருந்த மிகைக்கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,570 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இதற்காக மேலும் 94,770 செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2004 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 19 வரி செலுத்துனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகைத் தொகையான ரூபா 1,356,500 அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2000 ஆம் ஆண்டு முதல் 2004 செப்தெம்பர் 31 வரை வென்னப்புவ மின்சாரப் பொறியியலாளரிடமிருந்து பெறவேண்டிய வீதி மின்விளக்கு மீள்நிரப்பு பணமான ரூபா 1,167,000 தொகை சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஈ) உள்ளூராட்சி பேரவையால் 1999 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 100,000 தொகை மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு செயற்பட்டிராததுடன் 2007 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய வட்டித் தொகைக் கணிப்பீடும் கைவிடப்பட்டிருந்தது.

(உ) 2009, 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது பொருள் மெய்மையாய்வுகளின் போது இனங்காணப்பட்டிருந்த ரூபா 119,064

பெறுமதியான நூலகப் புத்தகங்கள் காணாமற்போனமைக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு புத்தகங்களின் பெறுமதி மற்றும் திணைக்களக் கட்டணமான ரூபா 29,766 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அப் பெறுமதி பெறவேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) ஊழியர் கடன்